பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

03 04 2025 6 45
வியாழக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்-

1. வக்ஃப் சட்டத் திருத்த மசோதா மக்களவையில் நிறைவேறியது.
2. உலக ஒலி ஒளி மற்றும் பொழுதுபோக்கு உச்சி மாநாட்டில் பங்கேற்குமாறு தென்னிந்திய திரைப்பட சங்க பிரதிநிதிகளுக்கு மத்திய இணை அமைச்சர் திரு எல் முருகன் அழைப்பு விடுத்துள்ளார்.
3. மாநிலத்தில் அறிவிக்கப்பட்டுள்ள அணைக்கட்டுகள், தடுப்பணைகள், பாலங்கள் போன்ற திட்டப்பணிகளை விரைந்து தொடங்கிடுமாறு நீர்வளத்துறை அமைச்சர் திரு துரைமுருகன் அதிகாரிகளை கேட்டுக் கொண்டுள்ளார்.
4. தமிழகத்தின் சில பகுதிகளில் அடுத்த இரண்டு நாட்களுக்கு மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
5. ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் குஜராத் அணி எட்டு விக்கெட் வித்தியாசத்தில் பெங்களூரு அணியை வென்றது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

**[]<<<>>>[]**

வக்ஃப் சட்டத் திருத்த மசோதா மக்களவையில் நிறைவேறியது.

மசோதாவிற்கு 288 உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்தனர்.

232 உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இந்த மசோதா மீது 12 மணி நேரத்திற்கும் மேலாக மக்களவையில் விவாதம் நடைபெற்றது.

பாரம்பரிய தலங்களை பாதுகாக்கும் வகையிலும், சமூக நலனை மேம்படுத்தும் வகையிலும், வக்ஃப் சொத்துக்களின் மேலாண்மையை நெறிப்படுத்துவதை வக்ஃப் திருத்த மசோதா நோக்கமாகக் கொண்டுள்ளது.

சொத்து நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மையை அதிகரிப்பதையும், வக்ஃப் வாரியங்கள் மற்றும் உள்ளூர் அதிகாரிகளுக்கிடையே ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதையும், தொடர்புடையவர்களின் உரிமையை பாதுகாப்பதையும் இந்த சட்டத்தி.ருத்த மசோதா நோக்கமாகக் கொண்டுள்ளது.

இஸ்லாமிய பெண்களின் குறிப்பாக கணவனை இழந்த, விவாகரத்துபெற்ற பெண்களின் பொருளாதார மற்றும் சமூக நிலையை மேம்படுத்துவதற்கும் இந்த மசோதாவில் வகை செய்யப்பட்டுள்ளது.

வக்ஃப் வாரியத்தின் சிறந்த நிர்வாகத்திற்காக இஸ்லாமியர்களின் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளும் இதில் இடம்பெறுவார்கள் என்று மசோதாவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.,

இந்த மசோதா குறித்த விவாதத்திற்கு பதிலளித்து பேசிய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ, வக்ஃப் வாரிய நடவடிக்கைகளில் இஸ்லாமியர் அல்லாதோர் தலையிடுவார்கள் என்று கூறப்படும் குற்றச்சாட்டு தவறானது என்று தெரிவித்தார்.

சிறுபான்மையினருக்கு இந்தியா பாதுகாப்பான நாடு என்று கூறிய அவர், இது சிறுபான்மையினருக்கு எதிரான அரசு என்ற எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டை மறுத்தார்.

பார்சி உள்ளிட்ட சிறிய சிறுபான்மையினர் நலனில்கூட அரசு அக்கறை கொண்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.,

இந்த மசோதா அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு எதிரானது என்று எதிர்க்கட்சி உறுப்பினர்களின் குற்றச்சாட்டுக்கு பதிலளித்த திரு கிரண் ரிஜிஜூ, இதற்கான உரிய காரணத்தை அவர்களால் தெரிவிக்க இயலவில்லை என்று குறிப்பிட்டார்.

இது அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு எதிரானது என்றால் நீதிமன்றம் ஏன் இதை ரத்து செய்யவில்லை என்று அவர் கேள்வி எழுப்பினார்.

இதையடுத்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கோரிய அனைத்து திருத்தங்களும் நிராகரிக்கப்பட்டு, வக்ஃப் சட்டத்திருத்த மசோதா மக்களவையில் நிறைவேறியது.

**[]<<<>>>[]**

மும்பையில் நடைபெறவுள்ள உலக ஒலி ஒளி மற்றும் பொழுதுபோக்கு உச்சி மாநாட்டில் பங்கேற்குமாறு தென்னிந்திய திரைப்பட சங்க பிரதிநிதிகளுக்கு மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் திரு எல் முருகன் அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அந்த சங்கத்தின் பிரதிநிதிகளுடன் காணொலி காட்சி வாயிலாக நேற்று அவர் விவாதித்தார்.

தென்னிந்திய திரைப்படக் சங்கத்தைச் சேர்ந்த தொழில்நுட்ப கலைஞர்கள், இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள், நடிகர்கள் உள்ளிட்டோர் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு அப்போது அவர் கேட்டுக் கொண்டார்.

இந்த மாநாட்டில் நடைபெறும் கண்காட்சியில் தென்னிந்திய திரைப்பட சங்கத்தின் சார்பாக பிரத்யேக அரங்கை அமைக்குமாறும் திரு எல் முருகன் அறிவுறுத்தினார்.

**[]<<<>>>[]**

நாட்டில் கடந்த நிதி ஆண்டில் ஆயிரத்து 681 ரயில் எஞ்ஜின்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில், இது அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் தயாரிக்கப்பட்ட எஞ்ஜின்களின் எண்ணிக்கையைவிட அதிகம் என்று கூறப்பட்டுள்ளது.

2023-24-ஆம் நிதி ஆண்டில் ஆயிரத்து 472 ரயில் எஞ்ஜின்கள் தயாரிக்கப்பட்ட நிலையில், கடந்த நிதி ஆண்டில் 19 சதவீதம் அளவிற்கு கூடுதலாக தயாரிக்கப்பட்டுள்ளது.

கடந்த பத்து ஆண்டுகளில் மொத்தம் ஒன்பதாயிரத்து 168 ரயில் எஞ்ஜின்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் கடந்த மாதம் பல்வேறு பகுதிகளில் நிகழ்ந்த சாலை விபத்துக்களில் உயிரிழந்த காவல்துறையைச் சேர்ந்த பெண் உதவி ஆய்வாளர் மற்றும் மூன்று தலைமைக் காவலர்களின் குடும்பத்தினருக்குத் தலா 30 லட்சம் ரூபாய் நிவாரண உதவி வழங்கப்படும் என்று முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும் அவர் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

மாநிலத்தில் அறிவிக்கப்பட்டுள்ள அணைக்கட்டுகள், தடுப்பணைகள், பாலங்கள் போன்ற திட்டப்பணிகளை விரைந்து தொடங்கிடுமாறு நீர்வளத்துறை அமைச்சர் திரு துரைமுருகன் அதிகாரிகளை கேட்டுக் கொண்டுள்ளார்.

சட்டப்பேரவையில் தமது துறை மானியக் கோரிக்கையின்போது அறிவிக்கப்பட்ட திட்டப் பணிகளை செயல்படுத்துவது தொடர்பாக அவர் நேற்று சென்னை தலைமைச் செயலகத்தில் நீர்வளத்துறை அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டார்.

நடப்பு நிதி ஆண்டில் காவிரி டெல்டா மாவட்டங்கள் உள்ளிட்ட 25 மாவட்டங்களில் சிறப்பு தூர்வாரும் திட்டத்தின் கீழ் 120 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அறிவிக்கப்பட்ட பணிகளை குறித்த காலத்திற்குள் நிறைவேற்றுமாறு அவர் கேட்டுக் கொண்டார்.

டெல்டா மாவட்டங்களில் கடைமடை வரை தடையின்றி நீர் செல்வதற்கு ஏதுவாக மேட்டூர் அணை திறப்பதற்கு முன்பாகவே தூர்வாரும் பணிகளை விரைந்து முடித்திடுமாறும் திரு துரைமுருகன் அதிகாரிகளை அறிவுறுத்தினார்.

[]<<<>>>[]

தமிழ்நாடு மின்சார வாரியம் சார்பாக நாளை மறுநாள் மாநிலம் முழுவதும் சிறப்பு முகாம் நடைபெறவுள்ளது.

இந்த சிறப்பு முகாமில் பொதுமக்கள் பங்கேற்று மின் கட்டண தொகை, மின் மீட்டர்கள், குறைந்த மின் அழுத்தம், சேதமடைந்த மின் கம்பங்களை மாற்றுதல் உள்ளிட்ட அனைத்து மின்சாரம் தொடர்பான புகார்களை அளிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது,

மாநிலத்தில் உள்ள அனைத்து மின்வாரிய செயற் பொறியாளர் அலுவலகங்களில் காலை 11 மணி முதல் இந்த சிறப்பு முகாம் நடைபெறும் என்று மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

[]<<<>>>[]

தமிழகத்தின் சில பகுதிகளில் அடுத்த இரண்டு நாட்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நீலகிரி முதல் திருநெல்வேலி வரையிலான மேற்குத் தொடர்ச்சிமலையையொட்டிய மாவட்டங்களில் ஒரு சில பகுதிகளில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகவும் அது கூறியுள்ளது.

மதுரை, சிவகங்கை உள்ளிட்ட தென்மாவட்டங்களின் சில பகுதிகளிலும் மழைக்கு வாய்ப்பு இருப்பதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

நாளை நீலகிரி முதல் கன்னியாகுமரி வரையிலான மேற்கு தொடர்ச்சி மலையையொட்டிய மாவட்டங்களிலும், நாளை மறுநாள் கோவை மாவட்ட மலைப்பகுதிகள், நீலகிரி, திண்டுக்கல், தென்காசி, சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு, தேனி மாவட்டங்களில் ஒரு சில பகுதிகளிலும் கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வுமையம் கூறியுள்ளது.

இதற்கிடையே தென்காசி மாவட்டம் வாசுதேவ நல்லூர் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் நேற்று மாலை இடிமின்னலுடன் கனமழை பெய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

மியான்மரில் நிலநடுக்கத்தால் உயிரிழந்தோர் எண்ணிக்கை மூவாயிரத்து மூன்றாக அதிகரித்துள்ளது.

**[]<<<>>>[]**

ஜப்பான் நாட்டின் **Kyushu** பிராந்தியத்தில் நேற்று இரவு நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் ஆறாக பதிவானது.

**[]<<<>>>[]**

சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தியதாக கண்டறியப்பட்டுள்ள ஒரு லட்சத்து 75 ஆயிரம் தொலைபேசி இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளதாக தொலைத் தொடர்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

இந்திய – அமெரிக்க கடற்படை கூட்டுப்பயிற்சி விசாகப்பட்டினத்தில் தொடங்கியது.

**[]<<<>>>[]**

நீலகிரி மாவட்டம் கூடலூர் ஊசிமலை பகுதியில் தேனீ-க்கள் கொட்டியதில் சுற்றுலாப் பயணி ஒருவர் உயிரிழந்தார்.

**[]<<<>>>[]**

நாமக்கல் மாவட்டத்தில் 108 அவசர ஊர்தியில் சிறப்பாக பணியாற்றிய மருத்துவ உதவியாளர் திரு மணிகண்டன் என்பவருக்கு ஆட்சியர் திருமதி உமா பதக்கம், சான்றிதழ் மற்றும் நினைவுப்பரிசு வழங்கி கௌரவித்தார்.

**[]<<<>>>[]**

தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரம் பகுதியில் அரசு கலைக்கல்லூரி மற்றும் ஜவுளிப் பூங்கா அமைக்கப்பட உள்ள இடத்தை ஆட்சியர் திரு இளம்பகவத் நேற்று ஆய்வு செய்தார்.

**[]<<<>>>[]**

தென்காசி மாவட்டம் வாசுதேவ நல்லூர் பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் வளர்ச்சித் திட்டப்பணிகள் குறிதது ஆட்சியர் திரு கமல்கிஷோர் ஆய்வு நடத்தினார்.

**[]<<<>>>[]**

கள்ளக்குறிச்சி மாவட்ட காவல்துறை சார்பில், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு ரஜத் சதுர்வேதி தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் கூட்டம் நடைபெற்றது.

**[]<<<>>>[]**

தருமபுரி மாவட்டம் கிருஷ்ணாபுரம் அரசு தொடக்கப்பள்ளியில் மாணவர்களின் கற்றல் மற்றும் வாசித்தல் திறன் குறித்து ஆட்சியா திரு சதிஷ் நேற்று ஆய்வு செய்தார்.

**[]<<<>>>[]**

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவு மேலாண்மை குறித்த புதிய வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றுமாறு பொதுமக்களை மாநகராட்சி கேட்டுக் கொண்டுள்ளது.

**[]<<<>>>[]**

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் குஜராத் அணி எட்டு விக்கெட் வித்தியாசத்தில் பெங்களூரு அணியை வென்றது.

பெங்களூருவில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த பெங்களூரு அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் எட்டு விக்கெட் இழப்புக்கு 169 ரன் எடுத்தது.

170 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய குஜராத் அணி 17 புள்ளி ஐந்து ஓவரில் இரண்டு விக்கெட்களை மட்டுமே இழந்து வெற்றி இலக்கை எட்டியது.

அதிகபட்சமாக ஜோஸ் பட்லர் 39 பந்துகளில் 73 ரன் எடுத்தார்.

கொல்கத்தாவில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் கொல்கத்தா அணி – ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

**[]<<<>>>[]**

ஐ எஸ் எல் கால்பந்து அரை இறுதி போட்டியின் முதலாவது சுற்றில் பெங்களூரு அணி – கோவா அணியை வென்றது.

நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் பெங்களூரு அணி இரண்டு – பூஜ்ஜியம் என்ற கோல் கணக்கில் கோவா அணியை வென்றது.

இன்று நடைபெறவுள்ள மற்றொரு அரை இறுதியின் முதலாவது சுற்றில் ஜாம்ஷெட்பூர் - மோகன் பெஹான் அணியை எதிர்கொள்கிறது

**[]<<<>>>[]**

ஸ்பெயினில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஷாக்கேத் மைநேனி – ராம்குமார் ராமநாதன் இணை காலிறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

நேற்று நடைபெற்ற காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்த இணை 6-1, 6-2 என்ற செட் கணக்கில அர்ஜெண்டினாவின் பெட்ரோ **cachin –**ஸ்பெயினின் **Izancorretja** இணையை வென்றது.